3410 · 19

11274/98

வாய்மையே வெல்லும்

## சுருக்கம்

மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம் — மூத்த விரிவுரையாளர் பதவிகள் நிரப்பப்படும் முறை — ஆணையிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வி (யூ1) துறை

அரசாணை நிலை எண்.80 நாள் 22.3.1999.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை நிலை எண். 106, பள்ளிக் கல்வி நாள் 11.3.97.
2. அரசாணை (1டி) எண். 98, பள்ளிக் கல்வி நாள் 13.8.97.
3. அரசாணை நிலை எண். 41, பள்ளிக் கல்வி நாள் 16.2.99.

## ஆணை:

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் மற்றும் மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றில் உள்ள மூத்த விரிவுரையாளர் பதவிகளை நேரடி நியமனம் மூலமாகவோ அல்லது இயக்ககம், மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம் ஆகியவற்றில் பணிபுரியும் விரிவுரையாளர்களிடையே பதவி உயர்வு மூலமாகவோ அல்லது பணி மாற்றுப் பணி மூலமாகவோ நிரப்பிக் கொள்ள அரசாணை (டி) எண்.98, பள்ளிக் கல்வி நாள் 17.8.97-ல் வகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி இயக்ககம் மற்றும் மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனம் ஆகியவற்றில் உள்ள மூத்த விரிவுரையாளர் பதவிகளில் நான்கில் ஒரு பங்கினை (25%) நேரடி நியமனம் மூலம் நிரப்ப ஆணையிடப்படுகிறது. பதவி உயர்வு மூலம் மீதமுள்ள பதவிகள் நிரப்பப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

எம்.ஏ. கௌரிசங்கர்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்:

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர், சென்னை-6.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
அரசு தேர்வுகள்
ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை-6.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

இரா, தேணாகா

பிரிவு அலுவலர்.